# வேலை நேரங்கள் மற்றும் மேலதிக வேலைக்கான ஊதியம் பற்றிய பணியாளர்களுக்கான தகவல்கள்

Ontario

மார்ச் 1, 2005

*பணித் தராதரங்கள் சட்டம் 2000இன் 21.1ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளபடி இந்த ஆவணம் பணித் தராதரங்களுக்கான இயக்குநரால் தயாரிக்கப்பட்டுள்ளது. **தயவுசெய்து இதை கவனமாகப் படித்து உங்கள் உரிமைகளைப் புரிந்து கொள்ளவும்.** உங்களுக்கு ஏதேனும் ஐயங்கள் இருந்தால் தொழில் அமைச்சினைத் தொடர்பு கொள்ளவும்.*

**பின்வரும் விஷயங்கள் பற்றி ஒன்ராறியோவிலுள்ள பொதுவான சட்டங்கள் இவை**

- வேலை நேரங்கள் மற்றும்
- மேலதிக வேலைக்கான ஊதியம்.

பணித் தராதரச் சட்டம் 2000இன் படி சில ஊழியர் களுக்கு சிறப்பு விதிகளும் விதிவிலக்குகளும் உண்டு.

மேலும் தகவல்கள் பெற தொழில் அமைச்சினை இலவசத் தொலைபேசி 1-800-531-5551 எண்ணில் தொடர்பு கொள்க.

## நாளாந்த அதிகபட்ச வேலை நேரம்

- ஒரு நாளுக்கு எட்டு மணி நேரம்
  **அல்லது**
- 8 மணி நேரத்திற்கும் அதிகமாக இருப்பின், வழக்கமான வேலைநாளில் ஒப்புக்கொண்ட வேலை நேரம்.

என்பவற்றிற்கும் மேலாக நீங்கள் வேலை செய்ய வேண்டியதில்லை.

நீங்கள் விரும்பினால், அதிக நேரம் வேலை செய்ய வேலையளிப்பவருடன் எழுத்து மூலம் ஒப்பந்தம் செய்யலாம். **அதிக நேரம் வேலைசெய்ய விருப்பமில்லை என்றால், நீங்கள் உடன்பாட்டில் கையெழுத்திட வேண்டியதில்லை.**

## வாராந்த அதிகபட்ச வேலைநேரம்

வாரத்தில் 48 மணி நேரத்திற்கும் மேலாக நீங்கள் வேலை செய்யத் தேவையில்லை.

நீங்கள் விரும்பினால், அதிக நேரம் வேலை செய்ய வேலையளிப்பவருடன் எழுத்து மூலம் ஒப்பந்தம் செய்யலாம்.

அவ்வாறு நீங்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டால், வேலையளிப்பவர் தொழில் அமைச்சின் பணித் தராதர இயக்குநரிடமிருந்து அதற்கான ஒப்புதலைப் பெற வேண்டும். **அதிக நேரம் வேலை செய்ய விருப்பமில்லை என்றால், நீங்கள் உடன்பாட்டில் கையெழுத்திட வேண்டியதில்லை.**

பின்வரும் வகையில் அதிக நேரம் வேலை செய்வதற்கு நீங்கள் எழுத்துமூலம் ஒப்புக் கொண்டால்:

- **வாரத்தில் 48 மணி நேரம், வாரத்தில் 60 மணி நேரம் வரை** – இயக்குநனரின் ஒப்புதலுக்கு அனுப்பிய 30 நாட்களுக்குப் பிறகு, சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படும் பட்சத்தில், உங்கள் அதிக நேர வேலையைத் துவக்குமாறு வேலையளிப்பவர் உங்களைக் கேட்டுக்கொள்ளலாம்.
- **வாரத்தில் 60 மணி நேரம்** – வாரத்தில் 60 மணி நேரத்திற்கும் அதிகமாக நீங்கள் வேலை செய்யத் **துவங்கு முன்னர்** உங்கள் வேலையளிப்பவர் இயக்குநரின் ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும்.

இயக்குநர் ஒப்புதல் அளித்த வேலை நேரத்திற்கும் அதிகமாக நீங்கள் வேலை செய்ய இயலாது. இது நீங்கள் ஒப்புக் கொண்ட நேரத்தைவிடக் குறைவாக இருக்கலாம்.

அதிக வேலை நேர ஒப்புதலுக்காக இயக்குநருக்கு அனுப்பிய விண்ணப்பத்தை நீங்கள் பார்க்கக்கூடிய இடத்தில் வேலையளிப்பவர் காட்சிக்கு வைக்க வேண்டும். இயக்குநரிடமிருந்து ஒப்புதல் கிடைத்ததும், அந்த ஒப்புதலை நீங்கள் பார்க்கக்கூடிய இடத்தில் வேலையளிப்பவர் காட்சிக்கு வைக்க வேண்டும்.

எழுத்து மூலமான இரண்டு வாரகால அவகாச முன்னறிவிப்புக் கொடுத்து, அன்றாட அல்லது வாராந்திர அதிக வேலை நேரத்திற்கான **ஒப்பந்தத்தை நீங்கள் ரத்து செய்ய முடியும்.** உரிய கால அவகாசத்தில் முன்னறிவிப்புக் கொடுத்து **உங்கள் வேலையளிப்பவரும் ஒப்பந்தத்தை ரத்து செய்ய முடியும்.**

## மேலதிக வேலைக்கான ஊதியம்

வாரத்தில் 44 மணி நேரத்திற்கும் அதிகமாக வேலை செய்யும் ஒவ்வொரு மணி நேரத்திற்கும், வழக்கமாகத் தரப்படும் ஊதிய விகிதத்தைவிட குறைந்தபட்சம் 1½ (ஒன்றரை) மடங்கு ஊதியத்தை வேலையளிப்பவர் தர வேண்டும். வாரத்தில் 48 மணி நேரத்திற்கும் அதிகமாக வேலை செய்ய நீங்கள் எழுத்தில் ஒப்புக்கொண்டிருந்தாலும்கூட, 44 மணி நேரத்திற்கும் அதிகமான ஒவ்வொரு மணி நேரத்திற்கும் மேலதிக வேலைக்கான ஊதியத்தை வேலையளிப்பவர் தர வேண்டும்.

மேலதிக வேலைக்கான ஊதியத்தை இரண்டு அல்லது அதற்கும் அதிகமான வாரத்திற்குப் பிறகு மொத்தமாக வாங்கிக் கொள்ள வேலையளிப்பவருடன் நீங்கள் எழுத்தில் ஒப்பந்தம் செய்யலாம். அவ்வாறு ஒப்பந்தத்தில் நீங்கள் கையெழுத்திட்டிருந்தால், வேலையளிப்பவர் தொழில் அமைச்சின் பணித்தராதர இயக்குநரிடமிருந்து அதற்கான ஒப்புதலைப் பெற வேண்டும். **மேலதிக வேலைநேரத்தை இவ்வாறு ஒன்றாகச் சேர்க்க விரும்பவில்லை என்றால் நீங்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திடத் தேவையில்லை.**

இந்த உடன்படிக்கைகளுக்கு ஒரு கால எல்லை இருக்க வேண்டும்; நீங்களும் உங்கள் வேலையளிப்பவரும் ஒப்புக் கொள்ளாதவரை அவற்றை ரத்து செய்ய முடியாது.

## சங்கம் அமைத்த பணியாளர்கள்

பொதுவாக, உங்களை பிரதிநிதித்துவம் செய்ய ஒரு சங்கம் இருந்தால், உங்கள் சார்பாக வேலையளிப்பவருடன் சங்கம்தான் ஒப்பந்தங்கள் செய்யும்.

## ஓய்வு நேரம் மற்றும் சாப்பாட்டுக்கான இடைவேளை

வேலையளிப்பவர் குறைந்தபட்சம் இதைத் தர வேண்டும்:

- ஒவ்வொரு நாளும் வேலைக்குப் பிறகு 11 மணி நேர ஓய்வு. ஒரு 'நாள்' என்பது 24-மணி நேரமாகும், காலண்டர்படியான நாளாக இருக்க வேண்டியதில்லை;
- ஷிப்டுகளுக்கிடையில் 8 மணி நேர ஓய்வு (ஷிப்டில் வேலை செய்தது 13 மணி நேரத்திற்கும் அதிகமாக இல்லாத பட்சத்தில் அல்லது நீங்களும் வேலையளிப்பவரும் எழுத்து மூலம் வேறுவகையான ஒப்பந்தம் செய்திருக்காத பட்சத்தில் மட்டும்); மற்றும்
- ஒவ்வொரு வார வேலைக்குப் பிறகும் தொடர்ச்சியாய் 24 மணி நேரம், அல்லது இரண்டு வார வேலைக்குப் பிறகு தொடர்ச்சியாக 48 மணி நேரம்.

ஐந்து மணி நேரத்திற்கும் அதிகரிக்காத வேலைக்குப் பிறகு 30-நிமிடங்கள் சாப்பாட்டுக்கான இடைவேளை உங்களுக்குக் கிடைக்க வேண்டும். இந்த சாப்பாட்டு நேரத்தை இரண்டு இடைவேளைகளாக பிரித்து எடுத்துக்கொள்ள நீங்கள் வேலையளிப்பவருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.

## உங்கள் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன

நீங்கள் பின்வரும் விஷயங்களைச் செய்ததற்காக வேலையளிப்பவர் உங்களை மிரட்டவோ, வேலை நீக்கம் செய்யவோ, வேலை இடைநிறுத்தம் செய்யவோ, ஊதியத்தைக் குறைக்கவோ, தண்டிக்கவோ அல்லது இவற்றில் எதையேனும் செய்யப்போவதாக அச்சுறுத்தவோ முடியாது:

- அன்றாட அல்லது வாராந்திர வேலைநேரத்திற்கும் அதிகமாக வேலை செய்ய மறுப்பது;
- அன்றாட அல்லது வாராந்திர வேலைநேரத்திற்கும் மேலதிகமாக வேலை செய்ய ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுப்பது;
- நீங்கள் ஒப்புக்கொண்ட அதிக நேரத்தைவிட அதிகமாக வேலை செய்ய மறுப்பது; மற்றும்
- ஈஎஸ்ஏ சட்டத்தின்படியான உங்கள் உரிமைகள் பற்றிக் கேள்வி கேட்பது.

இவ்வாறு நிகழ்ந்தால், தொழில் அமைச்சைத் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் உரிமைகளைப் புரிந்து கொள்ளவும், கேள்விகளுக்கு விடையளிக்கவும், உங்கள் முறையீட்டை விசாரிக்கவும் தொழில் அமைச்சின் பணியாளர்கள் உதவுவார்கள்.

**குறிப்பு:** சங்கம் அமைத்துள்ள பணியாளர்கள் தமது உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் கருதினால், தொழில் அமைச்சுடன் தொடர்பு கொள்வதற்கு முன்பாக தமது சங்கப் பிரதிநிதியிடம் பேச வேண்டும்.

### தொழில் அமைச்சுடன் தொடர்பு கொள்க

பணித் தராதரத் தகவல் நிலையத்தைத் தொடர்பு கொள்க: 416-326-7160 அல்லது இலவசத் தொலைபேசி: 1-800-531-5551

அருகில் உள்ள தொழில் அமைச்சு அலுவலகத்திற்குச் செல்க (இதன் முகவரியை தொலைபேசி வழிகாட்டியின் நீலப்பக்கங்களில் காணலாம்)

மேலும் தகவல் பெறவும், அமைச்சை மின்அஞ்சலில் தொடர்பு கொள்ளவும் www.gov.on.ca/lab இணையத் தளத்தைப் பார்க்கவும்.

esa employment standards act